# திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

சேர்க்காடு, வேலூர்.

## அடித்தளப்படிப்பு

## பகுதி – I தமிழ்

## அனைத்து பட்டப்படிப்புப் பிரிவுகளுக்கும் பொதுவானது

## இரண்டாம் ஆண்டு

## மூன்றாம் பருவம்

# திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

சேர்க்காடு

வேலூர் - 632115

**அடித்தளப்படிப்பு**

**பகுதி – 1 தமிழ் தாள் III**

**அனைத்து இளநிலைப் பட்டப் படிப்புப் பிரிவுகளுக்கும் பொதுவானது**

**இரண்டாம் ஆண்டு**

**செய்யுள் திரட்டு**

**மூன்றாம் பருவம்**

(2012 – 2013)

**FOUNDATION COURSE**

**PART I – TAMIL**

**SECOND YEAR**

**III SEMESTER**

**COMMON TO ALL UNDERGRADUATE COURSES**

# நூலாக்கம்

**பாடத்திட்டக்குழுத்தலைவர்**

## முனைவர். உ.விஜயலட்சுமி

இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை

தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் கல்லூரி

வேலூர்.

பாடத்திட்டக்குழு உறுப்பினர்கள்

1. **இ. ஸ்டான்லி ஜோன்ஸ் கருணாகரன்**
   தமிழ்த்துறைத் தலைவர்
   இணைப் பேராசிரியர்
   ஊரிசு கல்லூரி, வேலூர்.
2. **முனைவர் ப. குமரன்**
   இணைப் பேராசிரியர்
   பெரியார் கலைக்கல்லூரி,
   கடலூர்.
3. **முனைவர் ச. தியாகராஜன்**
   தமிழ்த்துறைத் தலைவர்
   ஜவஹர் அறிவியல் கல்லூரி,
   நெய்வேலி.
4. **திரு.ச. சையத் பஷீர் உசேன்**
   தமிழ்த்துறைத் தலைவர்
   மஜ்ஹருல் உலூம் கல்லூரி
   ஆம்பூர்.
5. **முனைவர் பு.இரா. திலகவதி,**
   இணைப் பேராசிரியர்
   சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி,
   கடலூர்.
6. **முனைவர் ப. மகாலிங்கம்,**
   தமிழ்த்துறைத் தலைவர்
   மாநிலக் கல்லூரி,
   சென்னை.
7. **முனைவர் வி. அனுராதா**
   தமிழ்த்துறைத் தலைவர்
   அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரி,
   வாலாஜாபேட்டை.

## இரண்டாமாண்டு மூன்றாம் பருவம் - தமிழ்

## பொருளடக்கம்

| அலகு எண் | பாடத்தின் பெயர் |
|---|---|
| அலகு I | **திருக்குறள்**<br>நடுவு நிலைமை<br>வெ.்.காமை<br>புகழ்<br>அறிவு உடைமை<br>அவர்வயின் விதும்பல் |
| அலகு II | சிலப்பதிகாரம்<br>புகார்க் காண்டம் - ஒன்பதாவது காதை<br>கனாத்திறம் உரைத்த காதை<br>17 ஆவதுகாதை<br>மணிமேகலை – உலக அறவி புக்க காதை |
| அலகு III | சீவகசிந்தாமணி<br>நாமகள் இலம்பகம் - நாட்டுவளம்<br>கம்பராமாயணம் - சுந்தரகாண்டம் - திருவடிதொழுதபடலம் |
| அலகு IV | பெரியபுராணம் - முதல்காண்டபம் - இளையான்குடிமாற நாயனார் புராணம்<br>சீறாப்புராணம் - கிசுறத்துக்காண்டம் - மழையழைப்பித்தப் படலம்<br>இரட்சணிய யாத்திரிகம் - இரட்சணியபருவம் |
| அலகு V | **மொழித்திறன்**<br>நூல்மதிப்புரை<br>திறனாய்வு செய்தல்<br>கடிதம் வரைதல்<br>விண்ணப்பம் எழுதுதல்<br>மாதிரி வினாத்தாள்<br>**இலக்கிய வரலாறு**<br>அற இலக்கியங்கள் (பதினெண்கீழ்க்கணக்கு)<br>காப்பிய இலக்கியங்கள் |

# அலகு - I

## 1.திருக்குறள்

திருக்குறள் ஏழு சீர்களைக் கொண்ட குறள் வெண்பாவினால் பாடப்பட்டது. உலக இலக்கிய அரங்கில் தமிழனின் பெருமையை நிலைநாட்டும் உயர்வுடையது இந்நூல். இதனை உலகப் பொதுமறை என்றே அறிஞர்கள் புகழ்வர். உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பபால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளை உடையது. அறத்துப்பாலின் தனிமனித அறத்தையும், பொருட்பாலில் சமுதாய அறத்தினையும், காமத்துப்பாலில் இன்பநலத்தினையும் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். 133 அதிகாரங்களையும், 1330 பாக்களையும் உடையது.

**திருவள்ளுவர்**

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் மயிலையில் பிறந்தவர். மனைவியின் பெயர் வாசுகி. மதுரையில் திருக்குறளை அரங்கேற்றினார் என்பன போன்ற செவிவழிக்கதைகள் பல உண்டு. திருவள்ளுவர் என்பது குடிப்பெயராக அல்லது தொழில் சார்ந்த பெயராக இருக்கவேண்டும். உண்மைப்பெயர் நமக்குக் கிடைக்கவில்லை. நாயனார், தேவர், தெய்வப்புலவர், முதற்பாவலர், செந்தாப்போதார், பெருநாவலர், எனப் பாராட்டப்படுகின்றார். பாரதியார்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

எனப் பாராட்டியுள்ளார். பாடப்பகுதியாக நடுவுநிலைமை, வெ.ஃ.காமை, புகழ், அறிவு உடைமை, அவர்வயின் விதும்பல் ஆகிய ஐந்து அதிகாரங்கள் அமைந்துள்ளன.

# திருக்குறள்

## நடுவுநிலைமை

தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின். 1

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து. 2

நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 3

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும். 4

கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி. 5

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின். 6

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 7

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி. 8

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின். 9

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். 10

## வெஃகாமை

நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 1

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். 2

சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே
மற்றுஇன்பம் வேண்டு பவர். 3

இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 4

அஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 5

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 6

வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன். 7

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 8

அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு. 9

இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு. 10

# புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 1

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ் 2

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல். 3

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 4

நத்தம்போல் கேடும் உளதுஆகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது. 5

தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 6

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்? 7

வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின் 8

தசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம். 9

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர். 10

**அறிவு உடைமை**

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண். 1

சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. 2

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 3

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு. 4

உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு. 5

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. 6

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அ.்துஅறி கல்லா தவர். 7

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். 8

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். 9

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 10

## அவர்வயின் விதும்பல்

வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும்; அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல். 1

இலங்கிழாய்! இன்று மறப்பினென் தோள்மேல்
கலம்கழியும் காரிகை நீத்து. 2

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளென். 3

கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்
கோடுகொடு ஏறும்என் நெஞ்சு. 4

காண்கமன் கொண்கனைக் கண்ணார கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு. 5

வருகமன் கொண்கன் ஒருநாள்; பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. 6

புலப்பேன்கொல்; புல்லுவேன் கொல்லோ; கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின்? 7

வினைகலந்து வென்றிக வேந்தன்; மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 8

ஒருநாள் எழுநாள்போல் செல்லும், சேண்சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு. 9

பெறின்என்னாம், பெற்றக்கால் என்னாம், உறின்என்னாம்
உள்ளம் உடைந்துஉக்கக் கால்? 10

## அலகு - 2

# 2. சிலப்பதிகாரம்

### புகார்க்காண்டம் - ஒன்பதாவது காதை

### கனாத்திறம் உரைத்த காதை

**சிலப்பதிகாரம்**

தமிழில் எழுத்த முதற்காப்பியம். நாடகக் காப்பியம் என்று போற்றப்படும் சிறப்பினை உடையது. இலக்கியப் புதுமைகள் பல அமைந்துள்ள காப்பியமாகத் திகழ்கின்றது. இந்நூல் தமிழக மூவேந்தர்களுக்கும் உரியதாக, முந்நாட்டினைப் பற்றியதாக, புகார், மதுரை, வஞ்சி என்னும் மூன்று தலைநகரங்களால் காண்டப்பெயர் பெற்றதாக, இயல், இசை, நாடகம் என்னும் முப்பகுதிகளை உடையதாக விளங்குகிறது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்னும் மூன்று உண்மைகளைக் கூறுகிறது இந்நூல். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் சிறப்பையெல்லாம் நாம் அறிய துணைசெய்வது அடியார்க்கு நல்லார் எழுதிய உரையே. அவருக்கு முன்பு அரும்பதவுரை என்னும் மிகப்பழைய உரை ஒன்றும் காணப்படுகிறது. நம்பாடப்பகுதியான 'கனாத்திறமுரைத்த காதை' ஒன்பதாவது காதையாக புகார்க்காண்டத்தில் அமைந்துள்ளது.

**இளங்கோவடிகள்**

ஐம்பெருங்காப்பியங்களுள் முதலாவதாக விளங்கும் சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேரன் செங்குட்டுவனின் தம்பி. சீத்தலைச் சாத்தனாரின் நண்பர். அரச வாழ்வைத் துறந்து துறவியானார். தமிழர் வரலாறு, கலைகள், பண்பாடு, சமயம், அரசியல், தமிழின் சிறப்பு ஆகிய அனைத்தின் சாரமாக சிலப்பதிகாரம் விளங்குமாறு இளங்கோவடிகள் படைத்தளித்துள்ளார். முதன்முதலில் இயற்கையை வாழ்த்திப் பாடி காப்பியத்தைத் தொடங்கியுள்ளார். பத்தினி வணக்கத்தை காவியம் மூலம் தோற்றுவித்தவர். இவரது காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

## சிலப்பதிகாரம்

## கனாத்திறம் உரைத்த காதை

(கலிவெண்பா)

## தேவந்தி வரலாறு

அகநகர் எல்லாம் அரும்புஅவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய், பகல் மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி, இரவிற்குஓர்
கோலங் கொடி இடையார் தாம் கொள்ள - மேலோர் நாள்
மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்க,

பால் விக்கிப் பாலகன் - தான் சோர, மாலதியும்,
'பார்ப்பா னொடுமனையாள் என்மேற் படாதனஇட்டு
ஏற்பன கூறார்' என்று ஏங்கி மகக் கொண்டு
அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர் - தம் கோட்டம், பகல் வாயில்

உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம், வேல்கோட்டம்
வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ்க்கோட்டம்,
நிக்கந்தக் கோட்டம், நிலாக்கோட்டம் புக்கெங்கும்
'தேவிர்காள்! எம்உறுநோய் தீர்ம் என்று மேவி
பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு

ஏசும்படி ஓர் இளங்கொடி ஆய்; ஆசு இலாய்!
செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்;
பொய் உரையே அன்று; பொருள் உரையே; கையிற்
படுபிணம் தா' என்று பறித்து அவள்கைக் கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்து தூங்கு இருளில் சென்று ஆங்கு
இடுபிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி,
மடி அகத்து இட்டாள், மகவை இடியுண்ட
மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு, அச் சாத்தான்
'அஞ்ஞை! நீ ஏங்கி அழல்' என்று முன்னை
உயிர்க்குழவி காணாய் என்று, அக் குழவியாய் ஓர்

குயிற்பொதும்பர் நீழல் குறுக, அயிர்ப்பு இன்றி,
மாயக் குழவி எடுத்து மடித்திரைத்துத்

தாய்கைக் கொடுத்தாள் அத் தையலாள்; தூய
மறையோன்பின் மாணிஆய் வான் பொருள் கோள்வித்
துறைபோய், அவர் முடிந்த பின்னர், இறையோனும்

தாயத்தா ரோடும் வழக்கு உரைத்துத் தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டும் கடன் கழித்து, மேயநாள்
தேவந்தி என்பாள் மனைவி, அவளுக்குப்
'பூவந்த உண்கண் பொறுக்க' என்று மேவித், தன்
மூவா இளநலம் காட்டி "எம் கோட்டத்து

நீ வா" என உரைத்து நீங்குதலும் - தூமொழி
'ஆர்த்த கணவன் அகன்றனன், போய்எங்கும்
தீர்த்தத் துறைபடிவேன்' என்று அவனைப் பேர்த்து இங்ஙன்

மீட்டுத் தருவாய் என ஒன்றன் மேல் இட்டு,
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் - வாட்டருஞ்சீர்க்

கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறையுண்டென்று
எண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி;
அறுகு, சிறுபூளை, நெல்லொடுதூஉய்ச் சென்று;
'பெறுக, கணவனோடு! என்றாள் - 'பெறுகேன்'
கடுக்கும்என் நெஞ்சம்; கனவினால் என் கை

பிடித்தனன் போய்ஓர் பெரும்பதியுள் பட்டேம்;
பட்டபதியில் படாதது ஒருவார்த்தை
இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு, என் - தன்மேல்
'கோவலற்கு உற்றது ஓர் தீங்கு' என்று அது கேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன்; காவலனோடு

ஊர்க்குஉற்ற தீங்கும் ஒன்று உண்டால் உரையாடேன்;
தீக்குற்றம் போலும். செறி தொடீஇ! தீக்குற்றம்
உற்றேனொடு உற்ற உறுவனோடு யான்உற்ற
நற்றிறம் கேட்கின் நகை ஆகும் பொற்றொடீஇ!
கைத்தாயும் அல்லை; கணவற்கு ஒரு நோன்பு

பொய்த்தாய் பழம்பிறப்பில்; போய்க்கெடுக! உய்த்துக்
கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்,
மடலவிழ் நெய்தல்அம் கானல்; தடம் உள,
சோமகுண்டம் சூரியகுண்டம்; துறைமூழ்கி,
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு

தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்;
போகம்செய் பூமியினும் போய்ப்பிறப்பார் யாம் ஒரு நாள்
ஆடுதும் என்ற அணி - இழைக்கு அவ் ஆயிழையாள்
'பீடன்று என' இருந்த பின்னரே' - 'நீடிய
காவலன்' போலும் கடைத்தலையான் வந்து - நம்

கோவலன்!' என்றாள் ஓர் குற்றிளையாள், கோவலனும்
பாடுஅமை சேக்கையுள் புக்கு, தன் பைந்தொடி
வாடியமேனி வருத்தம் கண்டு, 'யாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,
குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த

இலம்பாடு நாணுத் தரும் எனக்கு' என்ன -
நலம்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்
'சிலம்பு உள; கொண்ம்' எனச் - சேயிழை கேள்; இச்
சிலம்பு முதல் ஆகச் சென்ற கலனோடு
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலர்ந்தசீர்

மாட மதுரையகத்துச் சென்று என்னோடு இங்கு
ஏடு அலர் கோதாய்! எழுக என்று, நீடிய
வினை கடைக் கூட்ட வியம் கொண்டான் கங்குதல்
கனைசுடர் கால்சீயா முன்.

## வெண்பா

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவி தன் சொல்லை வறிதாக்க - முந்தை
வினைகடைக் கூட்ட வியம்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன்.

## 3. மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களில் இரண்டாவதாகத் திகழும் மணிமேகலை, சீத்தலைச் சாத்தனாரால் பாடப்பெற்றது. மாதவியின் மகள் மணிமேகலையின் வரலாற்றை இந்நூல் கூறுவதால் மணிகேலை என்னும் பெயரினைப் பெற்றது. மணிமேகலைத்துறவு என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு. பரத்தை, மது, கொலை, களவு முதலியன கூடாது என்பதை வலியுறுத்தும் புரட்சிக்காப்பியமாகத் திகழ்கிறது. பசிப்பிணியைப் போக்குவதே தலையாய அறம் என்பதனை வலியுறுத்துகிறது. சமயக் கொள்கைகளை விளக்குவதற்காகத் தமிழில் எழுந்த முதல்காப்பியம் என்ற பெருமை உடையது.

பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க என்ற வாழ்த்தொடு விழாவறை காதையில் தொடங்கி இந்நூல் மணிமேகலை பவத்திறம் அறுக என நோற்ற காதையோடு 30 காதைகளை உடையது. அணிநலங்கள் சிறந்ததாகவும் பல உரையாசிரியர்களால் கையாளப்பட்ட சான்றுநூலாகவும் விளங்குகிறது. பௌத்தசமய தத்துவங்களை விளக்கும் நூலாதலின் வடமொழி, பாலிமொழிச் சொற்கள் கலந்துள்ளன. சமயக் கொள்கையையும், சமுதாயச் சீர்திருத்தங்களையும் கொண்டு விளங்குகிறது. நம் பாடப்பகுதியாகிய உலகஅறவி புக்க காதை பதினேழாவது காதையாக விளங்குகிறது.

### <u>சீத்தலைச் சாத்தனார்</u>

சீத்தலைச் சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர். பௌத்த சமயத்தவர் இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம் பாடுமாறுச் செய்தவர் இளங்கோவடிகளின் வேண்டுகோளால் மணிமேகலையைப் பாடியவர். கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்றழைக்கப்படும் இவர் தண்டமிழாசான் சாத்தன், நன்னூற் புலவன் எனப் பாராட்டப்பட்டவர் ஆவார். புத்தமத கொள்கைகளை இக்காப்பியத்தில் இவர் கூறினாலும் இதனை ஓர் அறநூலாகவே படைத்துள்ளார்.

### மணிமேகலை

### <u>உலக அறவி புக்க காதை</u>

பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஏற்ற

பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை,

அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்

திறத்து வழிப்படூஉம் செய்கை போல,

வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்

தான்தொலை வில்லாத் தகைமை நோக்கி

யானைத் தீநோய் அகவயிற் றடக்கிய

காயசண் டிகையெனுங் காரிகை வணங்கி,

‘நெடியோன் மயங்கி, நிலமிசைத் தோன்றி,

அடலரும் முந்நீர் அடைத்த ஞான்று,

குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்

அணங்குடை யளக்கர் வயிறுபுக் காங்கு

இட்ட தாற்றாக் கட்டழற் கடும்பசிப்

பட்டேன், என்றன் பழவினைப் பயத்தால்!

அன்னை! கேள்நீ ஆருயிர் மருத்துவி;

துன்னிய என்னோய் துடைப்பா யென்றலும்

எடுத்த பாத்திரத் தேந்திய அமுதம்

பிடித்தவள் கையில் பேணினள் பெய்தலும்,

வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்

துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும்,

மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்

காசில்காஞ் சனபுரக் கடிநக ருள்ளேன்;

விஞ்சையன் றன்னொடென் வெவ்வினை உருப்பத்

தென்றிசைப் பொதியில் காணிய வந்தேன்

கடுவரலருவிக் கடும்புனல் கொழித்த

இடுமணற் கானியாற் றியைந்தொருங் கிருந்தேன்

புரிநூன் மார்பில் திரிபுரி வார்சடை

மரவுரி யுடையன் விருச்சிகன் என்போன்,

பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யனையதோர்

இருங்கனி நாவற் பழமொன் றேந்தித்

தேக்கிலை வைத்துச் சேணாறு பரப்பிற்

பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்

தீவினை உருத்தலின் செருக்கொடு சென்றேன்

காலா லந்தக் கருங்கனி சிதைத்தேன்

உண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்

கண்டனன், என்னைக் கருங்கனிச் சிதைவுடன்;

சீர்திகழ் நாவலில் திப்பிய மானது;

ஈரா றாண்டில் ஒருகனி தருவது;

அக்கனி யுண்டோர் ஆறீ ராண்டு
மக்கள் யாக்கையின் வரும்பசி நீங்குவர் ;
பன்னீ ராண்டில் ஒருநா ளல்லது
உண்ணா நோன்பினேன்; உண்கனி சிதைத்தாய்!
அந்தரஞ் செல்லும் மந்திரம் இழந்து
தந்தித் தீயால் தனித்துயர் உழந்து
முந்நா லாண்டின், முதிர்கனி நானீங்கு
உண்ணு நாளுன்உறுபசி களைக! என
அந்நா ளாங்கவன் இட்ட சாபம்,
இந்நாள் போலும், இளங்கொடி! கெடுத்தனை -
வாடுபசி உழந்து மாமுனி போயபின்,
பாடிமிழ் அருவிப் பயமலை ஒழிந்தென்
அலவலைச் செய்திக் கஞ்சினன் அகன்ற
விலகொளி விஞ்சையன் விழுமமோ டெய்தி,
'ஆரணங் காகிய அருந்தவன் தன்னால்
காரணம் இன்றியுங் கடுநோ யுழந்தனை!
வானூ டெழுகென, 'மந்திரம் மறந்தேன்!
ஊனுயிர் நீங்கும் உருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்தும் என்றேற்குத்,
தீங்கனி கிழங்கு செழுங்காய் கல்லன
ஆங்கவன் கொணரவும் ஆற்றே னாக,
நீங்க லாற்றான் நெடுந்துய ரெய்தி -
ஆங்கவன் ஆங்கெனக் கருளொடு முரைப்போன்
சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்
கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வர்
ஆற்றா மாக்கட் காற்றுந்துணை யாகி
நோற்றோர் உறைவதோர் நோனகர் உண்டால்
பலநா ளாயினும் நிலனொடு போகி
அப்பதிப் புகுகென் றவனருள் செய்ய,
இப்பதிப் புகுந்தீங் குயானுறை கின்றேன் -

இந்திர கோடணை விழவணி வருநாள்
வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே
என்னுறு பெரும்பசி கண்டனன் இரங்கிப்
பின்வரும் ஆண்டவன் எண்ணினன் கழியும் -
தணிவில் வெம்பசி தவிர்த்தனை; வணங்கினேன்;
மணிமே கலை!யென் வான்பதிப் படர்கேன்,
துக்கந் துடைக்குந் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுண் டாங்கதில்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவி ஒன்றுண் டதனிடை
ஊரு ராங்கண் உறுபசி உழந்தோர்,
ஆரும் இன்மையின் அரும்பிணி யுற்றோர்,
இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால்;
வடுவாழ் கூந்தல்! அதன்பாற் போகென்
றாங்கவள் போகிய பின்னர் - ஆயிழை
ஓங்கிய வீதியின் ஒருபுடை ஒதுங்கி
வலமுறை மும்முறை வந்தனை செய்தவ்
உலக வறவியின் ஒருதனி யேறிப்,
பதியோர் தம்மொடு பலர்தொழு தேத்தும்
முதியோள் கோட்டம் மும்மையின் வணங்கிக்,
கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
தந்துணைப் பாவையைத் தான்தொழு தேத்தி,
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்,
பசிதின வருந்திய பைதல் மாக்கட்கு
அமுத சுரபியோ டாயிழை தோன்றி;
ஆபுத் திரன்கை அமுத சுரபியி.்.து,
‘யாவரும் வருக ஏற்போர் தாமென’
ஊணொலி அரவத் தொலியெழுந் தன்றே,
யாணர்ப் பேரூர் அம்பல மருங்கென்.

## அலகு - 3

## 4.சீவகசிந்தாமணி

ஐம்பெருங்காப்பிய வரிசையில் சீவகசிந்தாமணி மூன்றாவதாகத் திகழ்கிறது. விருத்தப்பாவினால் அமைந்த முதல்காப்பியம் இதுவே. தமிழ் இலக்கியப் போக்கை மாற்றிப் புதுத்திருப்பத்தை ஏற்படுத்தியது. காப்பிய இலக்கணங்கள் பலவும் நிறைந்தது. திருத்தக்க தேவரால் பாடப்பெற்றது. நூலின் தன்மையாலும் காப்பியத் தலைவனான சீவகனை, சிந்தாமணி என்று புகழ்ந்து கூறுவதாலும் சீவகசிந்தாமணி என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. 13 இலம்பகங்களையும் 3145 செய்யுட்களையும் உடையது. நச்சினார்க்கினியரால் உரை வகுக்கப்பட்டது. எண்மரை மணந்து இன்புற்ற சீவகனின் வரலாற்றைக் கூறுவதால் மணநூல் எனவும் அழைக்கப்படுகிறது.

இக்காப்பியம் துறவை வற்புறுத்தும் நோக்குடன் பாடப்பட்டதே ஆயினும் இன்பச்சுவை நிறைந்த காப்பியமாகத் திகழ்கின்றது. கற்பனை அழகும், கருத்துச்செறிவும் மிக்கதாகத் திகழ்கின்றது. சிந்தாமணி என்பது தெய்வத்தன்மை பொருந்திய ஒரு மாணிக்கக்கல். அது வேண்டியவர்க்கு வேண்டிய பொருளை வேண்டியவாறே அளிக்கும் தன்மையுடையது. இக்காப்பியமும் தமிழர்க்கு வேண்டிய நீதிகளை வேண்டியவாறே அளிக்கும் ஆற்றல் மிக்கது எனலாம்.

நாமகள் இலம்பகத்தில் அமைந்துள்ள நாட்டுவளம் இங்கு பாடப்பகுதியாக வைக்கப்பட்டுள்ளது.

### திருத்தக்கதேவர்

இவர் இளமையிலேயே பல கலைகளையும் கற்றுப் புலமை நிரம்பியவர். திருத்தகு முனிவர், திருத்தக்க மகா முனிகள், தேவர் என்னும் வேறு பெயர்களாலும் குறிப்பிடுவர். இவர் மதுரையிலிருந்த தமிழ்ச்சங்கத்துக்குச் சென்றபோது சமணத்துறவிகளால் இன்பச்சுவை மிக்க நூலை இயற்றமுடியாது என்று சிலர் கூறினர். இக்கூற்றை மறுப்பதற்காகவே திருத்தக்கதேவர் இன்பச்சுவை மிகுந்த சீவகசிந்தாமணியை இயற்றினார். வடமொழியில் உள்ள சத்திர சூடாமணி இந்நூலுக்கு முதல்நூல் என்பர். ஆயினும் கற்போருக்கு வடமொழிக்கதையின் தழுவல் என்ற உணர்வே தோன்றாதவண்ணம் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்.

## சீவகசிந்தாமணி

## நாமகள் இலம்பகம் - நாட்டுவளம்

நாவீற் றிருந்த புலமாமக ளோடு நன்பொற்
பூவிற் றிருந்த திருமாமகள் புல்ல நாளும்
பாவீற் றிருந்த கலைபாரறச் சென்ற கேள்விக்
கோவீற் றிருந்த குடிநாட்டணி கூறலுற்றேன். 1

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசி தறிவாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போயதுண்டே. 2

### மழையும் வெள்ளமும்

இலங்க லாழியி னான்களிற் றீட்டம்போற்
கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை
பொலங்கொள் கொன்றையி னான்சடை போன்மின்னி
விலங்கல் சேர்ந்துவிண் ணேறிவிட் டார்த்தவே. 3

தேனி ரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேனி ரைத்து விசும்புற வெள்ளிவெண்
கோனி ரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்தவே. 4

குழவி வெண்மதிக் கோடுழக் கீண்டுதேன்
முழவி னின்றதிர் மொய்வரைச் சென்னியி
னிழியும் வெள்ளரு வித்திரள் யாவையுங்
குழுவின் மாடத் துகிற்கொடி போன்றவே. 5

இலங்கு நீண்முடி யிந்திரன் மார்பின்மேல்
விலங்கி வீழ்ந்தமுத் தாரமும் போன்றவை
நலங்கொள் பொன்னொடு நன்மணி சிந்தலாற்
கலன்பெய் பேழை கவிழ்த்தவும் போன்றவே. 6

வள்ளற் கைத்தவ மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை
உள்ள மில்லவர்க் கூர்தொறு முய்த்துராய்
வெள்ள நாடு மடுத்து விரைந்ததே. 7

மையல் யானையின் மும்மத மார்ந்துதே
னைய பொன்னகம் பாடிய ளைந்துராய்ச்
செய்ய சந்தனந் தீம்பழ மாதியா
நைய வாரி நடந்தது நன்றரோ. 8

வீடில் பட்டினம் வௌவிய வேந்தெனக்
காடு கையரிக் கொண்டு கவர்ந்துபோய்
மோடு கொள்புனன் மூரி நெடுங்கட
னாடு முற்றிய தோவென நண்ணிற்றே. 9

பழங்கொடெங் கிலையெனப் பரந்து பாய்புனல்
வழங்கமுன் னியற்றிய சுதைசெய் வாய்த்தலை
தழங்குரல் பம்பையிற் சாற்றி நாடெலா
மழங்குதீம் புனலக முரிய மொய்த்ததே. 10

வெலற்கருங் குஞ்சரம் வேட்டம் பட்டெனத்
தலைத்தலை யவர்கதந் தவிர்ப்பத் தாழ்ந்துபோய்க்
குலத்தலை மகளிர்தங் கற்பின் கோட்டகம்
நிலைப்படா நிறைந்தன பிறவு மென்பவே. 11

## மக்கள் மகிழ்ச்சியும், வாழ்வின் வளமும்

கவ்வையுங் கடும்புன லொலியுங் காப்பவர்
செவ்வனூ றாயிரஞ் சிலைக்கும் பம்பையு
மெவ்வெலாத் திரைகளு மீண்டிக் காரொடு
பவ்வநின் றியம்புவ தொத்த வென்பவே. 12

மாமனு மருகனும் போலு மன்பின
காமனுஞ் சாமனுங் கலந்த காட்சிய
பூமனு மரிசிலப்புல் லார்ந்த மோட்டின
தாமின மமைந்துதந் தொழிலின் மிக்கவே. 13

நெறிமருப் பெருமையி னொருத்த னீளினஞ்
செறிமருப் பேற்றினஞ் சிலம்பப் பண்ணுறீஇப்
பொறிவரி வராலின் மிரியப் புக்குடன்
வெறிகமழ் கழனியுள் ளுழுநர் வெள்ளமே. 14

சேறமை செருவினுட் செந்நெல் வான்முளை
வீறொடு விளைகெனத் தொழுது வித்துவார்
நாறிது பதமெனப் பறித்து நாட்செய்வார்
கூறிய கடைசியர் குழாங்கொண் டேகுவார். 15

பாற்சுவை யறிந்தவை பழனத் தாமரை
மேற்செலப் பாய்தலின் வெரீஇய வண்டினங்
கோற்றொடி நுளைச்சியர் முத்தங் கோப்பவ
ரேற்றிய மாலைத்தே னிரியப் பாய்ந்தவே. 16

இரிந்ததேன் குவளையி னெற்றி தைவர
முரிந்துபோ தவிழ்ந்துகொங் குயிர்க்கு முல்லையின்
அரும்புசேர்ந் தணிஞிமி றார்ப்ப வாய்பதம்
விருந்தெதிர் கொண்மெனத் தழுவி வீழ்ந்தவே. 17

வளமுடி நடுபவர் வரம்பில் கம்பலை
இளமழை முழக்கென மஞ்ஞை யேங்கலி
னளமரு குயிலின மழுங்கிப் பூம்பொழி
லுளமெலி மகளிரி னெடுங்கு மென்பவே. 18

கண்ணெனக் குவளையும் கட்ட லோம்பினார்
வண்ணவாண் முகமென மரையி னுட்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்
தண்வய லுழவர்தந் தன்மை யின்னதே. 19

நித்திலப் பந்துட னீன்று பாதிரி
யொத்தபூ வுடற்றிய நாவி னாகினாற்
றத்துநீர் நாரைமே லெறியத் தண்கடல்
பைத்தெழு திரையெனப் பறவை யாலுமே 20

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே. 21

மீன்கணி னளவும்வெற் றிடங்க ளின்மையால்
தேன்கணக் கரும்பியல் காடுஞ் செந்நெலின்
வான்புகழ் களிறுமாய் கழனி யாக்கமும்
ஊன்கணார்க் குரைப்பரி தொல்லென் சும்மைத்தே. 22

ஆய்ப்பிழி விருத்துவண் டயிற்றி யுண்டுதேன்
வாய்பொழி குவளைகள் சூடி மள்ளர்க
டேய்பிறை யிரும்புதம் வலக்கை சேர்ந்தினா
ராய்செநெ லகன்றகா டரிகுற் றார்களே. 23

வலியுடைக் கைகளான் மலர்ந்த தாமரை
மெலிவெய்தக் குவளைகள் வாடக் கம்பலம்
பொலிவெய்தப் பூம்பொய்கை சிலம்பிப் பார்ப்பெழ
மலைபட வரிந்துகூன் குயங்கைக் மாற்றினார் 24

வாளையி னினந்தலை யிரிய வண்டலர்
தாளுடைத் தாமரை கிழிய வண்சுமை
கோளுடை யிளையவர் குழாங்கொண் டேகலிற்
பாளைவாய்க் கமுகினம் பழங்கள் சிந்துமே 25

சோர்புயன் முகிற்றலை விலங்கித் தூநில
மார்புகொண் டார்ந்தது நரல வண்சுளை
யார்வுறு பலாப்பழ மழிந்த நீள்களம்
போர்வினான் மலிந்துடன் பொலிந்த நீரவே. 26

## வயல்வளமும் சோலைநலமும்

ஈடுசால் போரழித் தெருமைப் போத்தினால்
மாடுறத் தெழித்துவை களைந்து காலுறீஇச்
சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள்
கோடுயர் கொழும்பொனின் குன்ற மொத்தவே. 27

கரும்புக ணுடைப்பவ ராலை தோறெலாம்
விரும்பிவந் தடைந்தவர் பருகி விஞ்சிய
திருந்துசா றடுவுழிப் பிறந்த தீம்புகை
பரந்துவிண் புகுதலிற் பருதி சேந்ததே. 28

கிணைநிலைப் பொருநர்தம் செல்லல் கீழ்ப்படப்
பணைநிலை யாய்செநெற் பகரும் பண்டியும்
கணைநிலைக் கரும்பினிற் கவரும் பண்டியும்

மணநிலை மலர்பெய்து மறுகும் பண்டியும் 29
மல்லலந் தெங்கிள நீர்பெய் பண்டியும்
மெல்லிலைப் பண்டியுங் கமுகின் மேதகு
பல்பழுக் காய்க்குலை பெய்த பண்டியு
மொல்குதீம் பண்டம்பெய் தொழுகும் பண்டியும் 30

கருங்கடல் வளந்தரக் கரையும் பண்டியும்
நெருங்குபு முதிரையி னிறைந்த பண்டியும்
பெருங்கலிப் பண்டிகள் பிறவுஞ் செற்றுபு
திருந்தியெத் திசைகளுஞ் செறிந்த வென்பவே. 31

கிளிவளர் பூமரு தணிந்து கேடிலா
வளவயல் வைகலு மின்ன தென்பதேன்
றுளியொடு மதுத்துளி யறாத சோலைசூ
ழொளியமை யிருக்கையூ ருரைக்க நின்றவே. 32

பாசவல் லிடிப்பவ ருலக்கைவாழைப் பல்பழ
மாசினி வருக்கைமா தடிந்துதேங் கனியுதிர்த்
தூசலாடு பைங்கமுகு தெங்கினோண் பழம்பரீஇ
வாசத்தாழை சண்பகத்தின் வான்மலர்க ணக்குமே. 33

மன்றனா றிலஞ்சிமேய்ந்து மாமுலை சுரந்தபா
னின்றதாரை யானில நனைப்பவேகி நீண்மனைக்
கன்றருத்தி மங்கையர் கலம்நிறை பொழிதர
நின்றமேதி யாற்பொலிந்த நீரமாட மாலையே 34

வெள்ளிப்போழ் விலங்கவைத் தனையவாய் மணித்தலைக்
கொள்பவளங் கோத்தனைய காலகுன்றிச் செங்கண்
வொள்ளகிற் புகைதிரண்ட தொக்குமா மணிப்புறாக்
கிள்ளையோடு பாலுணுங் கேடில்பூவை பாடவே. 35

காடியுண்ட பூந்துகில் கழுமவூட்டும் பூம்புகை
மாடமாலை மேனலார் மணிக்குழலின் மூழ்கலிற்
கோடுயர்ந்த குன்றின்மேற் குழீஇயமஞ்ஞை தஞ்சிற
காடுமஞ்சி னுள்விரித் திருந்தவண்ண மன்னரே. 36

## <u>நாட்டின் சிறப்பு</u>

கோட்டிளந் தகர்களுங் கொய்ம்மலர தோன்றிபோற்
சூட்டுடைய சேவலுந் தோணிக்கோழி யாதியா
வேட்டவற்றி னூறுளார் வெருளிமாந்தர் போர்கொளீஇக்
காட்டியார்க்கும் கௌவையுங் கடியுங்கௌவை கௌவையே. 37

விலக்கில்சாலை யாவர்க்கும் வெப்பின்முப் பழச்சுனைத்
தலைத்தணீர் மலரணிந்து சந்தனஞ்செய் பந்தரும்
கொலைத்தலைய வேற்கணார் கூத்துமன்றி யைம்பொறி
நிலத்தலைய துப்பெலா நிறைதுளும்பு மூர்களே. 38

அடிசில்வைக லாயிரம் மறப்புறமு மாயிரம்
கொடியனார்செய் கோலமும் வைகறோறு மாயிரம்
மடிவில்கம்மி யர்களோடு மங்கலமு மாயிரம்
ஒடிவிலைவெ றாயிர மோம்புவாரி னோம்பவே. 39

நற்றவஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய்வார்க்கு ம..திடம்
நற்பொருள்செய் வார்க்கிடம் பொருள்செய்வார்க்கு ம..திடம்
வெற்றவின்பம் விழைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென
மற்றநாடு வட்டமாக வைகுமற்ற நாடரோ. 40

## 5. கம்பராமாயணம்

## திருவடி தொழுதபடலம்

வால்மீகி எழுதிய வடமொழி இராமாயணத்தை கம்பர் தமிழில் எழுதியதால் கம்பராமாயணம் என இந்நூல் பெயர்பெற்றது. கம்பர் வால்மீகியைத் தழுவி எழுதினாலும் தமிழ்ப்பண்பாட்டிற்கேற்பவே இக்காப்பியத்தைப் படைத்துள்ளார். இது பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் ஆகிய ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் கொண்ட மாபெரும் காப்பியமாகும். சுந்தரகாண்டத்திலுள்ள திருவடி தொழுதபடலம் ஈண்டு பாடப்பகுதியாக வைக்கப்பட்டுள்ளது.

### கம்பர்

கம்பர் காளி கோயிலில் பூசை செய்யும் எளிய குடும்பத்தில் தோன்றியவர். இவர் பிறந்த ஊர் சோழநாட்டுத் திருவழுந்தூர். ‘கவிச்சக்கரவர்த்தி கம்பன்’, ‘கல்வியில் பெரியவன் கம்பன்’, கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், கம்பநாடன் கவிதையில் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே எனப் பலராலும் பாராட்டப்பெற்றவர். இவர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.

### கம்பராமாயணம்

### திருவடிதொழுத படலம்

நீங்குவென் விரைவில் என்னும் நினைவினன் மருங்கு நின்றது
ஆங்கு ஒரு குடுமிக் குன்றை அருக்கனின் அணைந்த ஐயன்
வீங்கினன் உலகை எல்லாம் விழுங்கினன் என்னவீரன்
பூங் கழல் தொழுது வாழ்த்தி விசும்பிடைக் கடிது போனான் 1

மைந்நாகம் என்ன நின்ற குன்றையும் மரபின் எய்தி
கைந் நாகம் அனையோன் உற்றது உணர்த்தினன் கணத்தின் காலை
பைந் நாகம் நிகர்க்கும் வீரர் தன்நெடுவரவு பார்க்கும்
கொய்ந் நாகம் நறுந்தேன் சிந்தும் குன்றிடைக் குதியும் கொண்டான் 2

**வானர வீரர் அனுமானைப் பாராட்டி உபசரித்தல்**

போய் வரும் கருமம் முற்றிற்று என்பது ஓர் பொம்மல் பொங்க
வாய்வெரீ இ நின்ற வென்றி வானர வீரர் மன்னோ
பாய்வரு நீளத்து ஆங்கண்இருந்தன பறவைப்பார்ப்புத்
தாய்வரக் கண்டதன்னஉவகையின் தளிர்த்தார்அம்மா 3

### அனுமான் சீதை கூறிய ஆசியைத் தெரிவித்தல்

வாலி காதலனை முந்தை வணங்கினன் எண்கின் வேந்தைக்
காலுறப் பணிந்து பின்னை கடன்முறை கடவோர்க்கு எல்லாம்
ஏலுற இயற்றி ஆங்கண் இருந்து இவண் இருந்தோர்க்கு எல்லாம்
ஞாலநாயகன் தன் தேவி சொல்லினள் நன்மைஎன்றான் 4

### அனுமான் செய்திகளைக் கூறுதல்

என்றலும் கரங்கள் கூப்பி எழுந்தனர் இறைஞ்சித் தாழா
நின்றனர் உவகை பொங்க விம்மலால் நிமிர்ந்த நெஞ்சர்
சென்றதுமுதலா வந்தது இறுதியாய்ச் செப்பாற்பாலை
வன் திறல் உரவோய் என்ன சொல்லுவான் மருத்தின் மைந்தன் 5

ஆண்தகை தேவி உள்ளத்து அருந்தவம் அமையச் சொல்லி
பூண்ட பேர் அடையாளம் கைக் கொண்டதும் புகன்று போரில்
நீண்டவாள் அரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்புச்சிந்தி
மீண்டதும் விளம்பான் தான் தன் வென்றியை உரைப்ப வெள்கி 6

### வானரவீரர் மேலே செய்யும் காரியம் என்? என அனுமானைக் கேட்டல்

பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்த தன்மை
உரைசெய ஊர் தீ இட்டது ஓங்கு இரும் புகையே ஓத
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்ட
தெரிதர உணர்ந்தேம் பின்னர் என் இனிச் செய்தும் என்றார் 7

### யாவரும் இராமனைக் காணுதற்கு விரைதல்

யாவதும் இனி வேறு எண்ணல் வேண்டுவது இறையும் இல்லை
சேவகன் தேவி தன்னைக் கண்டமை விரைவில் செப்பி
ஆவது அவ் அண்ணல் உள்ளத்து அருந் துயர் ஆற்றலே ஆம்
போவது புலமை என்ன பொருக்கென எழுந்து போனார் 8

### அனுமான் முந்திச் செல்லுதல்

ஏத நாள் இறந்த சால வருந்தினது இருந்த சேனை
ஆதலால் விரைவின் செல்லல் ஆவது அன்று அளியம் எம்மைச்
சாதல் தீர்த்து அளித்த வீர தலைமகன் மெலிவு தீரப்
போவது நீ முன்னர் என்றார் நன்று என அனுமான் போனான் 9

### சுக்கிரீவன் இராமனைத் தேற்றுதல்

முத்தலை எ∴கினாற்கும் முடிப்ப அருங் கருமம் முற்றி
வித்தகன் தூது மீண்டது இறுதியாய் விளைந்ததன்மை
அத்தலை அறிந்த எல்லாம் அறைந்தனம் ஆழியான் மாட்டு
இத்தலை நிகழ்ந்த எல்லாம் இயம்புவான் எடுத்துக் கொண்டாம் 10

கார் வரை இருந்தனன் கதிரின் காதலன்
சீரிய சொற்களால் நெருட்ட செங் கணான்
ஆர் உயிர் ஆயிரம் உடையன் ஆம் எனா
சோர்தொறும் சோர்தொறும் உயிர்த்துத் தோன்றினான். 11

தண்டல் இல் நெடுந் திசை மூன்றும் தாயினர்
கண்டிலர் மடந்தையை என்னும் கட்டுரை
உண்டு உயிர் அகத்து என ஒறுக்கவும் உளன்
திண் திறல் அனுமனை நினையும் சிந்தையான் 12

ஆரியன் அருந் துயர்க் கடலுள் ஆழ்பவன்
சீரியது அன்று நம் செய்கை தீர்வு அரும்
மூரி வெம் பழியொடும் முடிந்ததாம் என
சூரியன் புதல்வனை நோக்கிச் சொல்லுவான் 13

## சுக்கிரீவனிடம் இராமன் துயருடன் பேசுதல்

குறித்த நாள் இகந்தன குன்ற தென் திசை
வெறிக் கருங் குழலியை நாடல் மேயினார்
மறித்து இவண் வந்திலர் மாண்டுளார் கொலோ
பிறித்து அவர்க்கு உற்றளது என்னை பெற்றியோய் 14

மாண்டனள் அவள் இவள் மாண்ட வார்த்தையை
மீண்டு அவர்க்கு உரைத்தலின் விளிதல் நன்று எனா
பூண்டது ஓர் துயர் கொடு பொன்றினார்கொலோ
தேண்டினர் இன்னமும் திரிகன்றார்கொலோ 15

கண்டனர் அரக்கரை கறுவு கைம்மிக
மண்டு அமர் தொடங்கினார் வஞ்சர் மாயையால்
விண்தலம் அதனில் மேயினர் கொல் வேறு இலாத்
தண்டல்இல் நெடுஞ்சிறைத் தளைப்பட்டார்கொலோ 16

கூறின நாள் அவர் இருக்கை கூடலம்
ஏறல் அஞ்சுதும் என இன்ப துன்பங்கள்
ஆறினர் அருந் தவம் அயர்கின்றார்கொலோ
வேறு அவர்க்கு உற்றது என் விளம்புவாய் என்றான் 17

## சீதையின் நிலைமையை அனுமான் குறிப்பினால் உணர்த்தல்

என்புழி அனுமனும் இரவி என்பவன்
தென் புறத்து உளன் எனத் தெரிவது ஆயினான்
பொன் பொழி தடக்கை அப்பொரு இல் வீரனும்
அன்புறு சிந்தையன் அமைய நோக்கினான் 18
எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல்தன்
மொய் கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி வாழ்த்தினான் 19

## இராமனின் மகிழ்ச்சி

திண் திறல் அவன் செயல் தெரிய நோக்கினான்
வண்டு உறை ஓதியும் வலியன் மற்று இவன்
கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று எனக்
கொண்டனன் குறிப்பினால் உணரும் கொள்கையான் 20

ஆங்கு அவன் செய்கையே அளவை ஆம் என
ஓங்கிய உணர்வினால் விளைந்தது உன்னினான்
வீங்கின தோள் மலர்க் கண்கள் விம்மின
நீங்கியது அருந் துயர்க் காதல் நீண்டதே 21

## சீதையைக் கண்ட செய்தியை அனுமான் இராமனிடம் கூறல்

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலை கடல் இலங்கைத் தென் நகர்
அண்டர் நாயக இனி துறத்தி ஐயமும்
பண்டு உள துயரும் என்று அனுமன் பன்னுவான் 22

உன்பெருந்தேவி என்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன் பெருந்தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்
என்பெருந் தெய்வம் ஐயா இன்னமும் கேட்டி என்பான் 23

பொன் அலது இல்லை பொன்னை ஒப்பு என பொறையில் நின்றாள்
தன் அலது இல்லைத் தன்னை ஒப்புளனத் தனக்கு வந்த
நின்அலது இல்லைநின்னை ஒப்புளன நினக்கு நேர்ந்தாள்
என்அலது இல்லைஎன்னை ஒப்புளன எனக்கும் ஈந்தாள் 24

உன் குலம் உன்னது ஆக்கி உயர் புகழ்க்கு ஒருத்திஆய
தன் குலம் தன்னது ஆக்கி தன்னை இத்தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கு ஈந்து வானவர் குலத்தை வாழ்வித்து
என் குலம் எனக்குத் தந்தாள் எனஇனிச் செய்வது எம்மோய் 25

விற்பெருந்தடந் தோள் வீர வீங்கு நீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பது ஒன்றும் இரும் பொறை என்பது ஒன்றும்
கற்பு எனும் பெயரது ஒன்றும் களி நடம் புரியக் கண்டேன் 26

கண்ணினும் உளைநீ தையல் கருத்தினும் உளைநீ வாயின்
எண்ணினும் உளை நீ கொங்கை இணைக்குவை தன்னின் ஓவாது
அண்ணல் வெங்காமன் எய்த அவர் அம்பு தொளைத்த ஆறாப்
புண்ணினும் உளைநீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற்று ஆமோ 27

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார் விண் நோய்
காலையும் மாலை தானும் இல்லது ஓர் கனகக் கற்பச்
சோலைஅங்கு அதனில் உம்பி புல்லினால்தொடுத்த தூய
சாலையில் இருந்தாள் ஐய தவம் செய்த தவம் ஆம் தையல் 28
மண்ணொடும் கொண்டு போனான் வான் உயர் கற்பினாள் தன்
புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான் உலகம் பூத்த
கண் அகன் கமலத்து அண்ணல் கருத்திலாள் தொடுதல் கண்ணின்
எண்அருங் கூறாப் மாய்தி என்றது ஓர் மொழியை எண்ணி 29

தீண்டிலன் என்னும் வாய்மை திசைமுகன் செய்த முட்டை
கீண்டிலது அனந்தன் உச்சி கிழிந்திலது எழுந்து வேலை
மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில வேதம் செய்கை
மாண்டில என்னும் தன்மை வாய்மையால் உணர்தி மன்னோ 30

சோகத்தான் ஆய நங்கை கற்பினால் தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவிமாரும் வான் சிறப்பு உற்றார் மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன் மகுடத்தாள் பதுமத்தாளும்
ஆகத்தாள் அல்லள் மாயன் ஆயிரம் மௌலி மேலாள் 31

இலங்கையை முழுதும் நாடி இராவணன் இருக்கை எய்தி
பொலங் குழையவரை எல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தேன்
அலங்கு தண்சோலை புக்கேன் அவ்வழி அணங்கு அன்னாளை
கலங்கு தெண் திரையிற்று ஆய கண்ணின் நீர்க் கடலில் கண்டேன் 32

அரக்கியர் அளவு அற்றார்கள் அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப நின்பால் நேயமே அச்சம் நீக்க
இரக்கம் என்ற ஒன்று தானே ஏந்திழை வடிவம் எய்தி
தருக்கு உயர் சிறை உற்றன்ன தகையன் அத்தமியள் அம்மா 33

தையலை வணங்கற்கு ஒத்த இடைபெறும் தன்மை நோக்கி
ஐய யான் இருந்த காலை அலங்கல் வேல் இலங்கை வேந்தன்
எய்தினன் இரந்து கூறி இறைஞ்சினன் இருந்துநங்கை
வெய்து உரை சொல்ல சீறிக் கோறல் மேற் கொண்டுவிட்டான் 34
ஆயிடை அணங்கின் கற்பும் ஐயநின் அருளும் செய்ய
தூய நல் அறனும் என்று இங்கு இனையன தொடர்ந்து காப்ப
போயினன் அரக்கிமாரை சொல்லுமின் பொதுவின் என்று ஆங்கு
ஏயினன் அவர் எலாம் என் மந்திரத்து உறங்கியிற்றார் 35

அன்னதுஓர் பொழுதில் நங்கைஆர் உயிர் துறப்பதாக
உன்னினள் கொடி ஒன்று ஏந்திக் கொம்பொடும் உறைப்பச் சுற்றி
தன் மணிக்கழுத்தில் சார்த்தும் அளவையில் தடுத்து நாயேன்
பொன் அடி வணங்கி நின்று நின்பெயர் புகன்றபோழ்தில் 36

வஞ்சனை அரக்கர் செய்கை இதுஎன மனக்கொண்டேயும்
அஞ்சன வண்ணத்தான் தன் பெயர் உரைத்து அளியை என்பால்
துஞ்சுறு பொழுதில் தந்தாய் துறக்கம் என்று உவந்து சொன்னான்
மஞ்சு என வன மென் கொங்கை வழிகின்ற மழைக்கண் நீராள் 37

அறிவுறத் தெரியச் சொன்ன பேர் அடையாளம் யாவும்
செறிவுற நோக்கி நாயேன் சிந்தையில் திருக்கம் இன்மை
முறிவு அற எண்ணி, வண்ண மோதிரம் காட்டக் கண்டாள்
இறுதியின் உயிர் தந்து ஈயும் மருந்து ஒத்தது அனையது எந்தாய் 38

ஒரு கணத்து இரண்டு கண்டேன் ஒளி மணி ஆழி ஆன்ற
திரு முலைத் தடத்தாள் வைத்தாள் வைத்தலும் செல்வ! நின்பால்
விரகம் என்பதனின் வந்த வெங்கொழுந் தீயினால் வெந்து
உருகியது உடனே ஆறி வலித்தது குளிர்ப்பு உள்ஊற 39

வாங்கிய ஆழிதன்னை வஞ்சர் ஊர் வந்ததாம் என்று
ஆங்கு உயர் மழைக் கண்நீரால் ஆயிரம்கலசம் ஆட்டி
ஏங்கினன் இருந்தது அல்லால் இயம்பலள் எய்த்தமேனி
வீங்கினள் வியந்தது அல்லால் இமைத்திலள் உயிர்ப்பு விண்டாள் 40
அன்னவர்க்கு அடியனேன் நிற்பிரிந்த பின் அடுத்த எல்லாம்
சொல்முறை அறியச் சொல்லி தோகை நீ இருந்த சூழல்
இன்னது என்று அறிகிலாமே இத்துணை தாழ்த்தது என்றே
மன்ன! நின்வருத்தப்பாடும் உணர்த்தினென் உயிர்ப்பு வந்தாள் 41

இங்கு உள தன்மை எல்லாம் இயைபுளி இயையக் கேட்டாள்
அங்கு உள தன்மை எல்லாம் அடியனேற்கு அறியச் சொன்னாள்
திங்கள் ஒன்று இருப்பென் இன்னே திரு உளம் தீர்ந்தபின்னை
மங்குவென் உயிரோடு என்று உன் மலரடி சென்னி வைத்தாள் 42

**சீதை தந்த சூடாமணியை இராமனிடம் அனுமான் தருதல்**

வைத்தபின் துகிலின் வைத்த மா மணிக்கு அரசை வாங்கி
கைத்தலத்து இனிதில் ஈந்தாள் தாமரைக்கண்கள் ஆர
வித்தக! காண்டி! என்றுகொடுத்தனன் வேத நல்நூல்
உயர்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கிநிற்பான். 43

## அலகு - 4

# 6. பெரியபுராணம்

### இளையான்குடி மாற நாயனார் புராணம்

பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாக பெரியபுராணம் விளங்குகிறது. காப்பியத்துக்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது இதன் சிறப்பு நோக்கி பெரியபுராணம் என்று வழங்கப்பட்டது. சுந்தரர் பாடிய 'திருத்தொண்டத்தொகை' நம்பியாண்டார் நம்பி இயற்றிய 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆகிய இவ்விரு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு சிவனடியார்களின் பெருமைகளை விளக்கிக் கூறுவது பெரியபுராணம். பெரியபுராணத்தில் இரண்டு காண்டங்களும், பதின்மூன்று சருக்கங்களும் உள்ளன. பாடப் பகுதியாகிய 'இளையான்குடி மாற நாயனார் புராணம்' முதல் காண்டத்தில் தில்லைவாழ் அந்தணர் சருக்கம் என்ற இரண்டாவது சருக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

**சேக்கிழார்**

பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார். தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவருடைய காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் என்னும் சோழமன்னனின் முதலமைச்சர் இவரது இயற்பெயர் அருள்மொழித்தேவர் என்பது. உமாபதி சிவாச்சாரியர் சேக்கிழார் புராணம் எழுதி பெரியபுராண ஆசிரியரை சிறப்பித்துள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தாம் பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்னும் நூலால் சேக்கிழாரின் சிறப்புகளைப் பாராட்டியுள்ளார்.

### பெரியபுராணம்

### இளையான்குடி மாறநாயனார் புராணம்

அம்பொன் நீடிய அம்ப லத்தினில் ஆடுவார் அடி சூடுவார்
தம்பி ரான் அடி மைத்தி றத்துயர் சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையில் நீடுசூத்திர நற்கு லஞ்செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னார்இளை யான்கு டிப்பதி மாறனார் 1

ஏரின் மல்கு வளத்தி னால்வரும் எல்லை இல்லதோர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யார்அடி யார்திறத்து நிறைந்தோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன் கொள்வார் 2

ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதொர் தன்மையால்
நேர வந்தவர் யாவராயினும் நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்து
ஈரம் மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின் 3

கொண்டு வந்துமனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆச னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துளார். 4

ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவி லார்உளம் மகிழவே
நாளு நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்ப ரப்பு நெருங்கு செல்வம் நிலாவிளண்
தோளி னார்அள கைக்கி ருத்திய தோழ னாரென வாழுநாள் 5

செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வ தன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதினும் வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடியசெல்வம் மெல்ல மறைந்து நாடோறும் மாறிவந்து
ஒல்லையில் வறு மைப்ப தம்புக உன்னினார் தில்லை மன்னினார். 6

இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும் எம்பிரான் இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்கு தல்இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கை யராயினார். 7
மற்றவர் செயல் இன்ன தன்மைய தாக மாலய னான அக்
கொற்ற ஏனமும் அன்ன மும்தெரி யாத கொள்கைய ராயினார்
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதை யாளுடன் இன்றிஓர்
நற்ற வத்தவர் வேட மேகொடு ஞாலம் உய்ந்திட நண்ணினார். 8

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைந்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். 9

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்
தார இன்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென் என்று. 10

நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாம்இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ஙனே அணங்கேஎன. 11

மாது கூறுவள் மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரில்லை
போதும் வைகிற்றுப் போம்இடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயல் என்று. 12

செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகும் மற்று
அல்ல தொன்றறி யேன் என் றயர்வுற. 13
மற்ற மாற்றம் மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வம் எனப்பெரி துளமகிழ்ந்து
உற்ற காதலி னால்ஒருப் பட்டனர்
சுற்ற நீர்வயல் செல்லத் தொடங்குவார். 14

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்து
அருகு நாப்பன் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்டு
உருகு கின்றது போன்ற துலகெலாம். 15

எண்ணும் இவ்வுல கத்தவர் யாவரும்
துண்ணெ னும்படி தோன்றமுன் தோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழல் பாம்என்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து 16

உள்ளம் அன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லார்இளை யான்குடி மாறனார். 17

காலி னால்தட விச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி இடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். 18

வந்தபின் மனைவி யாரும் வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி
வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை என்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார். 19
முறித்தவை அடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி வாக்கிய உலையிற் பெய்து
வெறுப்பில்இன் அடிசில் ஆக்கிமேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி என்செய் கோம் என்றிறைஞ்சினார் கணவ னாரை. 20

வழிவரும் இளைப்பி னோடும் வருத்திய பசியி னாலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க. 21

மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று. 22

கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
இணையிலா தாரை ஈண்டு அமுதுசெய் விப்போம் என்ன
உணர்வினால் உணர ஒண்ணாஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயில் அகற்ற லுற்றார். 23

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்யஎன் பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும் தொண்டரும் திகைத்து நின்றார். 24

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி. 25
அன்பனே அன்பர்பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கும் மிக்கான். 26

இப்பரி சிவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி
முப்புரஞ் செற்றார் அன்பர் முன்பெழுந் தருளிப் போனார்
அப்பெரி யவர்தம் தூய அடியிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதிவேந்தன் செயலினை விளம்ப லுற்றேன்.. 27

## சீறாப்புராணம்

## மழை அழைப்பித்த படலம்

இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் தலைசிறந்த சீறாப்புராணம் உமறுப்புலவரால் இயற்றப்பட்டது. ‘சீறா’ என்ற சொல் ‘சீறத்’ என்ற அரபுசொல்லின் திரிபாகும். இச்சொல்லின் பொருள் ‘வாழ்க்கை வரலாறு’ என்பது. முகம்மது நபியின் வரலாற்றினை இந்நூல் 3 காண்டங்கள், 92 படலங்களில் சிறப்பாக எடுத்துரைக்கிறது. நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையைக் கருப்பொருளாகக் கொண்டு, காப்பிய இலக்கணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்று சிறந்து விளங்குகிறது சீறாப்புராணம். இந்நூலின் அரபுநாட்டு வருணணையில் தமிழகத்தைக் காணமுடிகிறது. மெக்கா நகரம் மதுரை நகரைப் போலவே வருணிக்கப்படுகிறது. இவ்வாறு இந்நூலின் வழி உமறுப்புலவரின் தமிழ்நாட்டுப் பற்றினை உணர்ந்துகொள்ள முடிகிறது.

பாடமாக அமைந்துள்ள பகுதி ‘ஹிஜிரத்துக்’ காண்டத்திலுள்ள மழையழைப்பித்தப் படலம் ஆகும்.

### உமறுப்புலவர்

உமறுப்புலவர் இசுலாமிய தமிழ்ப்புலவர்களுள் முதன்மையானவர் நறுமணப் பொருட்களை விற்றுவாழ்ந்த செய்யது முகம்மது அலி என்பவரின் புதல்வர் ஆவார். கடிகை முத்துப் புலவரிடம் தமிழ் பயின்றார். எட்டையபுர சமஸ்தானப் புலவராக விளங்கியவர். வள்ளல் சீதக்காதியின் ஆதரவில் இக்காப்பியத்தை இயற்றினார். இசுலாமியக் கம்பர் எனப் போற்றப்படுபவர் இவரது காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு ஆகும்.

## சீறாப்புராணம்

## மழையழைப்பித்த படலம்

## அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

முனிவற வலிமா நல்கு முலையுறு நறும்பான் மாந்திப்
பனிமதிக் கருணை செய்து படரவ வழைத்துப் பேசுந்
தனிமுதற் றூத ராறா மாண்டினிற் றகைமை பெற்ற
வனைகழல் சகுபி மார்கள் வழுத்திட விருக்கு நாளில் 1

கீர்த்திசேர் வள்ளல் வெள்ளிக் கிழமையிற் குத்து பாவி
லார்த்தெழுந் தோதி மின்ப ரதனிடை யிருக்கும் போதில்
கூர்த்தசீர் சகுபி மாரிற் குரைகழல் சுலைக்கு வென்போர்
பார்த்திவர் தம்மைப் பார்த்துப் பரவிநின் றினைய சொன்னார். 2

மாரிநீர் வறந்து சோலை மரமிலை யுதிர்ந்து மிக்க
பாரினி லெழுந்த பைங்கூழ் பசையறக் கருகிக் கானற்
றேரினம் பரந்த பெற்ற சிறார்களுக் குணவு நல்கும்
வாரிள முலைப்பால் வற்ற வருந்தினர் மடவா ரெல்லாம். 3

தருமமுந் தவமு முள்ள தயவும்போ யெவருங் கொஞ்சக்
கருமமுங் களவும் பாவ காரிக ளுறவுங் கொண்டு
வருவிருந் தொருவன் வந்தால் வாயிலை யடைத்துத் தூய
வரிவையர் தமக்கு நாணி யாண்மைகெட் டலைந்தா ரன்றே. 4

கருமைசேர் பெரிய மேதி கபிலையு நறும்பால் வற்றி
யருமையா யீன்ற கன்றும் வானுல கதனிற் செல்ல
வொருவழி நடப்பக் கால்க ளுதைக்கா லடிப்ப மாழ்கித்
தெருவழி கிடக்கும் வாட்டஞ் செப்புதற் கரிய தம்மா. 5

பறவைகள் பறக்கி லாது பழுவங்க ளடுக்கு மங்கு
நிறைதளி ரிலாமை கண்டு நெட்டுயிர்ப் பெறிந்து பாரச்
சிறகினை விரித்துத் தண்ணீர் தேடிச்சென் றோடி விண்ணி
லுறைதுளி யின்றி நாவு முலர்ந்துமெய் புலர்ந்த மாதோ. 6

மருதநன் னிலமும் பாலை வனமென வுலர்ந்து வாவி
பெருகிய கூவ லோடை பிறங்குநீர் வறந்தி யாதும்
பருகநன் னீரு மின்றிப் பசிமிகுத் தழகு குன்றிப்
யரிவையர் கற்பு மின்றி யகலிட மெலிந்த தன்றே. 7

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

ஊனற மெலிந்து புலால்பொதிந் திருந்த
வுடலமு மென்புரு வாகி
மேனிமி ரொளிபோய்க் கரங்கடா ளதைத்து
மெலிந்திறந் தனர்சிலர் சிலபேர்
கூனியுங் குறைந்துந் திருந்தடை கிழங்குங்
கொணர்ந்தவித் துப்பறப் பிசைந்து
கானினி லலைந்து திரிந்தனர் சாம
காலமு மிகுந்தன வென்றே. 8

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருத்தமா யுரைப்பக் கேட்டுத் திருநபி யிரங்கிப் பாரில்
வருத்தங்க ணீக்க வேண்டி மனத்தினிற் கிருபை மீறிப்
பொருத்தரும் புறுக்கான் வேதப் பொருளினை யெவரு முள்ளத்
திருத்தரு மொளியை யுன்னி துஆவிரந் திருகை யேந்தி 9

இறைவனே மறையின் வாழ்வே யெங்கணும் பரந்து நின்ற
குறைவிலாப் பொருளே சோதி குலவிய வொளிவே நீதி
முறைகுறை வறநின் றோனே முதல்வனே யழிவில் லாம
னிறைசெழுஞ் சுடரே யென்று நிகழ்த்திடக் கிருபை செய்தான். 10

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அகமிசை யிருந்து புசித்திடக் கிடையா
தாகுல மிகுத்துளங் கலங்கிச்
செகதல முழுதுந் திரிந்தலைந் தவர்க
டிரவியக் குவைபல வெதிர
விகலற வெடுத்து மனைமிசை புதைத்தோ
ரிதயபங் கையங்களிப் பென்ன
மகிதல முழுதுந் துதிசெயக் கரிய
மழைமுகிற் கருவுதித் ததுவே. 11

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

ஆதியி னருளி னால்வந் தருள்செயு முகிலாம் பிள்ளைத்
தீதறு திசையிற் றோன்றிச் செழுங்கிரி தவழ்ந்து விண்ணின்
மீதுற நடந்து காலால் விரைந்துசென் றோடிக் கூடிக்
காதல்சேர் நிலத்தை நாளுங் காத்திடச் செறிந்த தன்றே. 12

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அலையொடு தழுவிச் சூன்முதிர்ந் தெழுந்தே
யழகுற விளங்குமை மாரி
தலைமக வளிக்கத் தாய்மனைக் குற்ற
தனையள்போற் றரைமிசை யடுத்துக்
குலவிமெய் பதறிப் பயமிகுத் ததிர்ந்த
குரலொடு மின்னிவாய் வெருவித்
துலைவற வுறவாண் மகவளித் ததுபோற்
சொரிந்தது குளிர்ந்தந் நிலமே. 13

மின்னுட னிடியு முழக்கிடத் திகிரி
மிசைதிரி கதிரவன் மறைந்து
பின்னிட விரவும் பகலினு மிருளே
பிறங்கிடக் கலங்குநீர் பரந்து
முன்னிட நதிக ணிறைந்துமே லெழுந்து
மோதிடச் செறுக்கரை தகர்த்து
மன்னிய விருபால் வகுத்திடுங் காலை
மடையுட னெடுத்தெறிந் தனவே. 14

வேயினை முறித்து வெடித்தமுத் தனைத்து
முல்லையம் புறவினுக் களித்துத்
தூயநெய் தயிர்பால் கடத்துட னெடுத்துச்
சுடுநிலப் பாலையிற் செறித்து

நேயபைந் நாக மணியினை மருத

நிலத்தினிற் றொகுத்துநெற் குவிமேற்

போயதை நெய்த னிலத்திலிட் டுப்பைப்

புணரியிற் புகுத்தின வெள்ளம். 15

வீடுக டிறந்து வெளியிடை புகுந்து

வேண்டுவ திவையென விரும்பித்

தேடுவ தேடிச் சமைத்துண வரிதாய்ச்

சிறார்மனை தொறுமிருந் தலறப்

பாடுறு பசிகண் டவரனை மார்கள்

பயோதரந் தனைமுனிந் தினிமேற்

கேடறு மழைதா னுலகெலாம் பெய்து

கெடுத்திட வந்ததென் றுரைப்பார். 16

நளிர்புனல் பரந்து தலைக்கடை கடந்து

நலந்தரு மனைப்புறஞ் செறிய

குளிருடன் வாடைக் காலும்வந் தடிப்பக்

கொழுந்துவிட் டெரிகன றழுவி

வெளிவர வரிதா யிருந்தவ ரலது

மெலிந்தவ ரிளைஞர்க ளெவரு

மொளிவிடு நகைகள் கிடுகிடென் றடிப்ப

வுடற்பட படவென மிடைவார். 17

காற்றொடு குளிரு மடிப்பதாற் றொறுக்கள்

காடெலாங் கிடந்துயிர் விடுப்ப

வேற்றமா யயங்கள் கயம்புகக் கமல

மிழுப்பன வெண்ணிறந் தனவா

லாற்றினைக் கடந்தோ ராறுசெல் லரிதா

யாறிரு நாண்மழை பெயலால்

வேற்றொரு நகர்க்குஞ் செலவரி தாகி
        மெலிந்தன வுலகினி லெவையும். 18

பிறந்ததீ விருட்டிப் பொழிந்தன வுலகம்
        பேதுறற் றணிப்பதற் கினிமே
லறந்தவா வாய்மை முகம்மதே யன்றி
        யாற்றுதற் கியாருள ரென்னச்
சிறந்தசு காபி மார்கனி லொவர்
        சிந்தைகூர் புகர்தின மதனி
னிறைந்திடு மொழிசேர் குத்துபா வோது
        நேரத்திற் சென்றடி வணங்கி. 19

தருமமு மறிவு மொழுக்கமும் பொறையுந்
        தயவுமோர் வடிவென வெடுத்தே
வருதிரு நபியே யிருசது தினமாய்
        மழைபொழி தரநில வலையம்
வெருவரல் பெரிதாய் மெலிவது தவிர
        மேன்மையும் வளமையுங் கொடுக்கக்
கருமுகி லகலத் துவாச்செயு மென்றார்
        கபீபிற சூலவை செய்தார். 20

நன்மைக ளெவர்க்கு நடத்திட வந்த
        நபிதுவாச் செய்திட முகிலுந்
தென்வரை முதலாம் வரைகளிற் புகுந்த
        தினகரன் விசும்பிடை செறிந்தான்
புன்மர முதலா மானிட ரீறாப்
        புவியினி லுயிருள வனைத்துந்
தன்மமு நெறியுந் தவறிலா தீனர்
        குலமெனத் தழைத்துயர்ந் தனவே. 21

## 8. இரட்சணிய யாத்திரிகம்

## இரட்சணிய பருவம்

கிறித்துவக் காப்பியங்களுள் இரட்சணிய யாத்திரிகம் தலைசிறந்த படைப்பாகும். இது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் அமைந்தது. இக்காப்பியம் கூறும் இன்பம் பேரின்பமாகும். இதன் முதல்நூல் ஆங்கிலத்தில் ஜான்பனியன் இயற்றிய திருப்பயணியின் முன்னேற்றம் (Polgrims progress) என்பதாகும்.

பாவி ஒருவன், இயேசு பெருமானின் அருளால் மனம் திருத்தி, பேரின்ப வீட்டினை நோக்கி, சுருதிநூல் காட்டும் விவரத்தின்படி பயணத்தைத் தொடங்கி இன்ப துன்பங்களை எதிர்கொண்டு இறுதியில் மரண ஆற்றைக் கடந்து வீடுபேறு அடைவதாக இரட்சணிய யாத்ரிகம் கூறுகிறது. இந்நூல் ஆதிபருவம், குமாரபருவம், நிதானபருவம், ஆரணியபருவம், இரட்சணிய பருவம் என்ற ஐந்து பருவங்களையும் 47 படலங்களையும், 3766 செய்யுட்களையும் கொண்டது. நமக்குப் பாடப்பகுதியாக இரட்சணிய பருவம் அமைந்துள்ளது. இரட்சணியம் என்பது ஈடேற்றம் இரட்சணிய நெறியில் சென்று கொண்டிருந்த ஆன்மிகனும், கிறித்தவனும் நம்பிக்கையும் தரும சேத்திரத்தை அடைந்து அங்கு சிலநாள் தங்கி இன்புற்று, மரண ஆற்றைக் கடந்து, முத்தித்திருநகர் சேர்ந்த பகுதிகள் இங்குச் சொல்லப்படுகின்றன.

**எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை**

திருநெல்வேலி மாவட்டத்தில் ரெட்டியார் பட்டியில் வேளாளர் மரபில் தோன்றிய இவர் கிறித்துவ சமயத்தினைச் சார்ந்து, தம் பெயரை ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணப்பிள்ளை என்று மாற்றிக்கொண்டார். கிறித்துவக் கம்பர் என்று போற்றப்படுகின்றார். கிறித்தவர்களின் தேவாரம் என்று போற்றப்படும் இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள், இரட்சணிய சமய நிர்ணயம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். இவரது காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டாகும்.

### இரட்சணிய யாத்திரிகம்

### இரட்சணிய பருவம்

### தரும சேத்திரக் காட்சி

### (ஆன்மிகனும் நம்பிக்கையும் மெய் வாழ்வைக் கண்ணுற்றது)

உடல்உயிர் கண்இமை ஒத்த மாட்சியர்

படர்உறும் அனந்தரின் படுகர் வைப்பையும்

நடலையார் பிரபஞ்ச நச்சு வாழ்க்கையின்

கடையையும் கடந்துமெய் வாழ்வைக் கண்ணுற்றார். 1

**(தரும சேத்திரச் சிறப்பு)**

வானமும் பூமியும் இணைந்த மாண்பது
ஞானமும் நன்மையும் நனிக தித்தது
தீனமும் ஈனமும் சேர்வின்றி ஆயதுஎவ்
வூனமும் பாவமும் ஒழிந்த நீரது. 2

புனிதமே எங்கணும் பொலியும் பொற்பது
தனதமார் அருண்மழை பொழியும் சால்பது
மனிதர்வா னவர்என மருளத் தக்கது
நனிதவ ஒழுக்கத்தின் நலம்கொண் மொய்ம்பது. 3

சீலமும் ஒழுக்கமும் திகழ்ந்த செவ்வியில்
பாலொடு தேன்கலந்து ஓடும் பாலது
ஞாலமுற் றும்தொகூஉ நன்கு அருந்தினும்
சாலவும் பயன்படும் தகைமை சான்றது. 4

கருமபூ மியின்கடைக் கண்ண தாயது
திருமலைச் சாரலோடு இசைந்த சீரது
மருமலி தருமலர்ச் சோலை வாய்ந்தது
தருமசேத் திரம்எனப் பெயர்த ழைத்தது. 5

**வேறு**

(பயணிகளின் பரவச நிலை)

இன்ன ணம்தகு பரமசா தனங்களோடு இசைந்து
மன்னு ஞானநல் வளம்தரு தருமசேத் திரத்தைத்
துன்னு மாத்திரத்து ஆரணக் கிழவராம் தூயோர்
பன்ன ரும்பர மானந்த பரவச ரானார். 6

**(கிறித்தவன் நம்பிக்கைக்குக் காட்டும் காட்சிகள்)**

இனைய சீலராய் நன்னெறி பிடித்துஇரு வோரும்
தினைய னைத்தும்நோ வின்றிஉள் அதிசயம் சிறப்பத்
துனைவின் ஏகுழி வரம்பறு காட்சியைத் தொகுத்துப்
புனையும் வேதியன் தோழற்குக் காட்டினன் புகல்வான். 7

கூருற்று ஓங்கிய மதிவலோய் கொற்றவன் மகிமைச்
சீருற்று ஓங்கிய திருநகர் அணித்துறுஞ் செயலால்
ஏருற்று ஓங்குபைம் பொன்மய எழிலுருப் படைத்துஇப்
பாருற்று ஓங்கிய சராசரப் பகுதிகள் பாராய்! 8

அற்பு மல்கிய ஆருயிர்த் தோழநம் அருமைத்
தற்ப ரன்சுதன் பிராட்டியோடு உலவுலான் சமைத்த
விற்ப முத்தபைம் பொன்மலர்ப் பரிமளம் வீசும்
கற்ப கச்செழுங் காவனத்து எழில்நலம் காணாய்! 9

மீயு யர்ந்தவான் நாட்டிள வரசன்வீற் றிருக்க
தூய பொன்னொடு மின்னையும் வெயிலையும் தொகுத்து
மேய பன்மணி குயின்றுவிண் ணுறமிளிர்ந்து எங்கும்
பாயி ருஞ்சுடர் பரப்புமண் டபநிலை பாராய்! 10

நம்பர் நாட்டிய நம்பிக்கை உருக்கொண்ட நண்ப,
இம்பர் நாட்டிய திருச்சபை எனுமண வாட்டிக்கு
உம்பர் நாட்டிள வரசன்செய் ஒப்புடன் படிக்கைக்
கம்பம் நாட்டிய திருமணப் பந்தலைக் காணாய்! 11

என்ம னக்கினி யாய்சரு வேசுர நேசம்
நன்மை நற்குண நன்னடை நன்மனச் சான்று
தன்ம பாலனம் தயைஅன்பு சாந்தமென்று இனைய
பன்ம ணித்திரள் புரைகுண நிதிகளைப் பாராய்! 12

(அவர்கள் மணிமண்டபத்தை அடுத்தது)

இனைய யாவையும் வயின்தொறும் தோழனுக்கு இயச்
சினைய லர்ந்தபூங் காவகச் செழும்பொழில் நடுவண்
வனையும் பொன்திரு மாமணி மண்டபம் அடுத்தான்
நினைவின் நீங்கலா நம்பிக்கை யோடுமந் நிவிர்த்தன். 13

(வனக் காவலர் சந்தித்தது)

ஆய போழ்தத்து வனபரி பாலகர் அடுத்துத்
தூய யாத்திரைக் குறியினால் அவர்நிலை துணிந்து
நேய நன்மொழி நிகழ்த்திநும் நெறிக்கிடை நிகழ்ந்த
சேய காரியம் தெரிக்கஎன, வேதியன் தெரிப்ப. 14

நன்று கேட்டுஉளக் களிப்பொடு நாயகன் பரவி
நின்று 'செவ்வியீர்' பிரபஞ்ச நிருவிசா ரத்து
மன்றி ருந்தும்இவ் வளம்படு தருமசேத் திரத்து
முன்றில் வந்தனிர்; திருவருள் மாட்சியே முற்றும். 15

ஐயன் மீர்இனித் துன்பம்இன் றாயினும் ஆண்டோர்
மையி ருள்படு மரணத்தை வரன்முறை நீந்தித்
துய்ய வாயஅக் கரைப்படின் சுவர்க்கமே ரின்பம்
கைய தாகுமால், என்றுஉளம் கனிந்துரை யாடி. 16

வம்மின் ஈண்டு, என மலர்க்கரம் கொளுவிஉய் யானத்து
எம்ம ருங்கினும் இசைந்துள புதுமையைக் காட்டி
அம்ம! 'ஈதுஇது,' என்று அமைவெலாம் அகமுறத் தெருட்டி
'மம்மர் நீங்கிய மதிவலீர் கேண்ம்,' என வகுப்பார். 17

**(தரும சேத்திரத்து வளங்களை அவர்கள் கூறுதல்)**

மறியும் தண்புனல் மடுவுண்டு நதியுண்டு, வனையக்
கறையி லாதவெண் துகிலுண்டு, கவின்அணி யுண்டு,
நறிய முப்பழக்கனி யுண்டு, தீம்பழ நறையும்
நிறைய வுண்ட கானகம்உண்டுஇந் நிலத்தினில் எங்கும். 18

'தங்க மாளிகைத் தலமுண்டு, தலைவனைப் பரவப்
பொங்கு மாதவப் புரையுண்டு, புத்துரை திகழ்த்த
எங்கும் வேதியக் குழுக்களுண்டு; ஆதலின் எமரீர்,
இங்கி ருந்துசில் நாள்கழி மின்,' என இசைத்தார். 19

**(பயணிகள் அங்கு மகிழ்ந்திருத்தல்)**

புனித நீர்படிந்து ஆடுவர் பூந்துகில் வனைவர்
கனிதல் நீர்மையில் கடவுளைக் கைகுவித்து இறைஞ்சி
இனிது போனகம் அருந்துவர் இன்னிசை பயில்வார்
துனித விர்ந்துஅன வரதமும் தோத்திரம் புரிவார். 20

துன்னு மாதவக் குழுவொடு தோழமை கொள்வார்
பன்னு வேதிய ரோடுசம் பாடணை பயில்வார்
பொன்ன கர்த்தொனி செவிமடுத்து உளக்களி பூப்பார்
இன்ன வாறுஅவண் வைகல்ஓர் சிலகழிந் திடுங்கால். 21

**(கிறித்துவனுக்குள் இருக்கின்ற ஆன்மம் என்னும் தலைவி தன் தலைவனை எண்ணி)**

பன்ன ரும்பர லோகப தவிநீத்து
இந்நி லத்துவந்து எய்திய ஈசனார்
மன்னும் அன்புமய யத்திரு மேனியை
உன்னி உன்னித்தன் உள்ளம்உ ருகுவாள். 22

சேவ டித்துணை நோவத்தி சைதிசை
ஆவ லித்தெனைத் தேடிய அன்புளார்
கூவிக் கூவிவி ளிக்கக்கு றிக்கொளார்
பாவி யேன்பிழை யேஎன்று பன்னுவாள். 23

வருதி னத்தும ணத்தொழில் முற்றுவான்
குருதி வேர்த்துளி மேனியில் கோத்துஉகத்
திருவு ளத்துத்தி ருந்தணி செய்தசீர்
கருதி ஆவிக ரைந்துக லுழுவாள். 24

விருண மேனியில் வெவ்விருப் பாணிசெல்
தருணம் 'மற்றவர் தம்பிழை ஓர்கிலர்
அருள்ந யந்துமன் னிக்க, அத் தா,' எனும்
கருணை உள்ளிக்க சிந்துக லழுவாள். 25

ஞாலம் மேவும்ந ராத்தும நாயகன்
ஓல மார்குருசு ஒண்மடல் ஊர்ந்தருள்
சீல மாகத்தி ருத்துதி ருமணக்
கோலம் உள்ளிக் குழைந்துளம் தேம்புவாள். 26

ஆழி யான்வலப் பாகத்து அமர்ந்துளார்
வாழி வாழிஎன்று ஏத்தினும் வைகல்ஓர்
ஊழி யாகத்தி கைத்துள்உ டைந்தனள்
ஏழை ஆத்துமப் பன்னிஇங் கென்பவே. 27

**(விண்ணொலி கேட்டது)**

'ஈது காலத்துஉன் ஆன்மஇ ரட்சகர்
காத லித்துஉன் பலன்களும் கைக்கொடுஇங்கு
ஆத ரித்துஅடுக் கின்றன ரால்எனக்
கோதில் சீயோன் குமரிக்குக் கூறுமின்.' 28

என்றொர் சத்தம்எ ழுந்தது விண்ணிடை
மன்றல் மங்களம் மல்கிய பொன்னகர்
முன்றி னின்று முழங்கி முறைமுறை
துன்றுஎக் காளம்தொ னித்திடு மாறுபோல். 29

**(ஆன்மிகன் துயில் நீத்துத் தெளிவடைதல்)**

வானின்று உள்ளத்து வார்ந்தநல் வாக்கெனும்
தேனுண்டு ஆர்ந்தனன் ஆத்துமச் செல்வியும்;
ஊன ளைந்தஉ டல்துயில் வீசினான்
ஞானம் மல்கிய மெய்மறை நாவலன். 30

**(நம்பிக்கையின் உள்ளுணர்ச்சி)**

குருசு உயர்த்த குரிசில் வருகையின்
பரிசு உணர்ந்துநம் பிக்கையும், 'பண்ணவ,
தரிச னைக்குஅரு காயது தம்பிரான்
புரிசை மாநகர்; போதுவம் யாம்,' என்றான். 31
நன்று எனாஇரு வோரும்ந றும்பொழில்
மன்று ளார்விடை பெற்றுவந் தித்துடன்
சென்று கூடினர் செவ்விய நூல்நெறி
என்றும் மாறுஇல் இறைவனை ஏத்தியே. 32

**வேறு**

**மரண ஆறு**

பகலொளி சதாநின்று ஓங்கும் பவித்திர தேசாந் தத்தி
இகபர சந்தி யென்னும் இடரிருட் பிழம்பு தொக்குஅந்
அகவயின் கடுகிச் செல்லும் அடுதிரை மரண ஆற்றைக்
ககனயாத் திரிகர் தம்தம் கண்களில் தெரியக் கண்டார். 33

**(அவர்கள் இயேசுவின் திருவடிப் புணையைப் போற்றிப் பாடுதல்)**

கண்டுடல் மனமும் கண்ணும் கலங்கினர் கவன்றா ரேனும்
உண்டெமக்கு உறுதி என்னா உள்ளுளே ஊக்கித் தொண்டர்
மண்டலம் புரந்த சேசு மலரடிப் புணையைப் பற்றி
எண்டகு தேவாரம் கொண்டு இசைத்தனர் பிணிப்பார் நெஞ்சினில். 34

**(அவர்கள் பாடியது)**

**தேவாரம், கடைக்கணி, பண்: இந்தளம்**

பரனேபரம் பரனேபரப் பொருளேபரஞ் சோதி
உரனாடிய விசுவாசிகட் குவந்தாதரம் புரியும்
பெருமானடி யேனோபெரும் பாவிபிழை பட்டேன்
சரணாடிவந் தடைந்தேன்ஒரு தமியேன்கடைக் கணியே. 35

தூலத்தைஉ வந்துண்டுசு கித்துச்சுகம் பேணிக்
காலத்தையும் கழித்தேன்உயர் கதிகூட்டும்ரட் சணிய
மூலத்தனி முதலேகடை மூச்சோயுமுன் முடுகிச்
சீலத்திரு முகத்தார்ஒளி திகக்கடைக் கணியே. 36

கோதார்குணக் கேடன்மிகக் கொடியன்கொடும் பாவி
ஏதாகிலும் நன்றென்றிலன் எனினும்புறக் கணியா
ஆதாரசர் வேசாஅன வரதாஅருள் நாதா
பாதாரவிந் தம்சேர்த்தெனைப் பரிவாய்க்கடைக் கணியே. 37

கிருபாகர கருணாகர கிளர்புண்ணியப் பொருப்பே
பெருமாவடி யேன்செய்பிழை பொறுத்தென்னுயிர் பிரிக
மருவார்தரு குருசில் திகழ் வதனாம்புச மும்உன்
திருநாமமந் திரமும்அகம் திகழக்கடைக் கணியே. 38

## அலகு - 5

## மொழித்திறன், கடிதம் வரைதல், இலக்கியவரலாறு

## 9. மொழித்திறன்

**நூல் மதிப்புரை**

நூலின் பெயர் - ஆசிரியர் பெயர் - நூல் சார்ந்துள்ள துறை – வெளியிடும் நிறுவனத்தின் முகவரி – நூல் பற்றிய நிறை குறைகள் - தகவல் பகுதி – கருத்துப் பகுதி.

**அறிக்கை தயாரித்தல்**

நிகழ்ச்சி ஒன்றினை விளக்கும் வகையில் அறிக்கை அமைத்தல் - நிகழ்ச்சியின் பெயர், நிகழ்ச்சி நடைபெறும் இடம், நாள், காலம், பங்கேற்போர் ஆகிய செய்திகள் முகப்பில் குறிப்பிடப்படல் - நிகழ்ச்சி தொடங்கியது முதல் முடிவதுவரை உள்ள செய்திகள் திரட்டித் தரப்படல் - வரவேற்புரை, நன்றியுரை குறிப்பிடப்படல் - தலைமை உரையின் கருத்துச் சுருக்கமும் சிறப்புரையும் இடம்பெறல்.

## 10.கடிதம் வரைதல்

பெற்றோர், உறவினர், நண்பர் முதலானோர்க்கு எழுதும் உறவுமுறைக் கடிதங்கள் - கல்வி நிறுவனம், காவல்துறை முதலியவற்றிற்கு எழுதும் முறையீட்டுக் கடிதங்கள் - இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு எழுதும் கடிதங்கள் உள்ளிட்ட அலுவல் முறைக் கடிதங்கள்.

கடிதத்தில் இடம், நாள், தொடக்கம் (விளி), செய்தி, முடிப்பு, முகவரி முதலியன இடம்பெறல்.

**விண்ணப்பம் எழுதுதல்**

வேலை, நிதியுதவி, வீட்டிற்கு வேண்டிய குடிநீர்க் குழாய் இணைப்பு, ஊருக்குத் தேவையான நூலக வசதி முதலானவை வேண்டி விண்ணப்பித்தல்.

விண்ணப்பத்தில் அனுப்புநர், பெறுநர், முகவரி, விளி, பொருள், பார்வை, செய்தி, நன்றிகூறி முடித்தல், இடம், நாள், இணைப்பு உள்ளிட்டவை இடம்பெறல்.

## 11.இலக்கிய வரலாறு

### அற இலக்கியம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அற நூல்கள் திருக்குறள் ஆசிரியர் வரலாறு நூல் அமைப்பு நூலின் சிறப்பு அற நூல்களில் திருக்குறளின் தனித்தன்மை உரைகள்.

### காப்பிய இலக்கியம்

தமிழில் காப்பியத் தோற்றம் காப்பிய வகைகள் பெருங்கதை ஐம்பெருங்காப்பியங்கள்; சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, ஐஞ்சிறு காப்பியங்கள் - சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், நாக குமாரகாவியம், உதயண குமார காவியம், கம்பராமாயணம், பெரியபுராணம், இசுலாமிய, கிறித்துவக் காப்பியங்கள்.

பருவம் மூன்று மற்றும் நான்கிற்கான பொதுவான வினாத்தாள் அமைப்பு

(PATTERN OF QUESTION PAPER)

| | | |
|---|---|---|
| பகுதி அ | **பத்துவினாக்கள்**<br>ஒவ்வோர் அலகிலிருந்தும் இரண்டு வினாக்கள்<br>(தெரிவு வாய்ப்பு இல்லை)<br>(No Choice) | 10x2 = 20<br>மதிபெண்கள் |
| பகுதி ஆ | **ஐந்து வினாக்கள்**<br>ஒவ்வோர் அலகிலிருந்தும் இரண்டு வினாக்கள்<br>(இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்தல்) | 5x5 = 25<br>மதிபெண்கள் |
| பகுதி இ | **ஐந்து வினாக்களில் மூன்று வினாக்கள்**<br>ஒவ்வோர் அலகிலிருந்தும் ஒரு வினா<br>(எவையேனும் மூன்று வினாக்களைத் தெரிவு செய்தல்) | 3x10 = 30<br>மதிபெண்கள் |

**திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.**

**மாதிரி வினாத்தாள்**

இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

பட்டவகுப்பு – பொதுத்தமிழ் - தாள் III

(அறஇலக்கியம் காப்பிய இலக்கியம், மொழித்திறன், இலக்கியவரலாறு)

காலம் : 3 மணி மதிப்பெண் : 75

பகுதி அ 10 x 2 = 20

அனைத்து வினாக்களுக்கும் ஒருபத்தி அளவில் விடையளிக்கவும்

1. திருக்குறள் - குறிப்பு எழுதுக
2. ‘அறிவு’ எத்தகைய கருவி என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.
3. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை?
4. மணிமேகலை உலகஅறவியல் என்ன செய்தாள்?
5. திருத்தக்கதேவர் குறித்து எழுதுக.
6. சுக்கிரிவனிடம் இராமன் துயருடன் பேசியது யாது?
7. இறைவனுக்கு மாறநாயனார் எவ்வாறு உணவு படைத்தார்?
8. மழை இன்மையால் ஏற்பட்ட துயர் பற்றிக் கூறுக.
9. இரட்சணிய யாத்திரிகம் பற்றி எழுதுக.
10. இரட்டைக் காப்பியங்கள் யாவை?

பகுதி ஆ 5 x 5 =25

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக

11. அ. பிறர்பொருளை விரும்பாதிருக்க திருவள்ளுவர் கூறும் கருத்துகளை ஆராய்க.

(அல்லது)

ஆ. நடுவுநிலைமை குறித்து திருக்குறள் கூறுவன யாவை?

12. அ. மாற்றாள் மகவுக்குப் பால் அளித்த மாலதி கதை குறித்துக் கூறுக.

(அல்லது)

ஆ. காயசண்டிகை பெற்ற சாபம் யாது? விளக்குக.

13. அ. ஏமாங்கத நாட்டின் வளம் எவ்வாறு சீவகசிந்தாமணியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது?

(அல்லது)

ஆ. கம்பராமாயணத்தில் சீதையைக் கண்ட செய்தியை அனுமன் இராமனிடம் எவ்வாறு கூறுகின்றான்?

14. அ. மழையிலும் இறைவனுக்கு உணவு சமைக்க இளையான்குடி மாறநாயனார் நெல்லைக் கொண்டு வந்த திறனை விளக்குக?

(அல்லது)

ஆ. இரட்சணிய யாத்திரிகத்தில் குறிப்பிடப்படும் தரும சேத்திரச் சிறப்பு யாது?

15. அ. நீ குடியிருக்கும் கிராமத்திற்கு நூலகவசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் வரைக.

(அல்லது)

ஆ. ஐஞ்சிறுங்காப்பியங்கள் குறித்து எழுதுக.

பகுதி இ 3 x 10 = 30

கீழ்க்காணும் வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

16. புகழுடன் வாழ திருவள்ளுவர் கூறும் கருத்துக்களை விளக்குக.

17. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கனாத்திறம் உரைத்த காதையின் சிறப்பியல்புகளைத் தொகுத்துரைக்க.

18. சீதையைக் கண்ட அனுமன் இராமனிடம் வந்து வணங்கி கூறுவனவற்றை விவரி.

19. நபிகள் நாயகம் மழையினை அழைத்தவிதம் குறித்து ஆராய்க.

20. பதினென்கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

********